**தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்கள்த்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான காசுப்புத்தகத்தின் பிரகாரம் மீதியொன்றை காண்பிக்காத போதிலும், நிதிக்கூறில் உள்ளடக்கப்பட்டுள்ள காசுப்பாய்ச்சல் கூற்றினுள் காசிலான தேறிய மாற்றங்களின் கீழ் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதியாக ரூபா 1,122,073 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பெறுமதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு செலவிடல்களின் கீழ் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதியாக காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பந்தியின் விடயங்களுடன் இணங்குகின்றேன். தவறுதலாக திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உரிய இடத்தில் பதிவு செய்ய முடியாமையால் இந்த தவறு இடம்பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது இந்த விடயத்தை சரியாக பதிவு செய்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது அல்லது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பிணைகள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். நீதிமன்றங்கள் அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 01/2011 இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. |
| **(ஆ) நட்டங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்கள் 06 இன் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டியமை. | இந்தப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கவில்லை. நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவதுடன், அதனை நாளதுவரையாக்குவதற்கு 2018 ஆம் ஆண்டில் இந்த திணைக்களத்திற்கு எந்தவொரு நட்டத்தினையும் ஏற்பதற்கு நேரிடவில்லை. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 104(3) மற்றும் 104(4) நிதிப்பிரமாணம் | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பதற்கு 07 தாமதங்களுக்கு மேற்பட்ட தாமதமொன்று ஏற்படுமாயின், நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் பூர்வாங்க அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் இடம்பெற்றிருந்த 06 வாகன விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விசாரணையின் பின்னர் நட்டம் மற்றும் சேதம் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டம் தொடர்பான முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட தாமதமொன்று ஏற்படுமாயின், நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை யொன்றை சமர்ப்பிக்க வேண்டியமை. | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். வாகன விபத்துக்கள் தொடர்பில் எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். செலவின விடயங்களின் நிதியேற்பாடு எஞ்சுவதற்கான காரணங்கள் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடான ரூபா 36.98 மில்லியனில் ரூபா 7.06 மில்லியன் அல்லது 78 சதவீதம் வரையான நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | தயாரிக்கப்பட வேண்டும். | பின்வருமாறு. எதிர்பார்க்கப்பட்டவாறு செலவினம் மேற்கொள்ளப்படாமை, ''வெஸ்ட்லோ டேட்டா பேஸ்'' கொள்வனவின் போது வழங்கப்பட்ட விசேட விலைகள் குறைக்கப்பட்டமை, 2018 ஆம் ஆண்டின் போது உதவி சட்ட வரைபு தயாரிப்பு உத்தியோகத்தர்கள் அதிகளவில் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டதுடன், அந்த உத்தியோகத்தர்களுக்குரிய படிகள் செலுத்தப்படுவது சுற்றறிக்கையின் 11 ஆம் பிரிவின் கீழானவை மற்றும் ''வெஸ்ட்லோ டேட்டா பேஸ்'' கொள்வனவு செய்வதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளமையால் சட்டப் புத்தங்களை கொள்வனவு செய்வதற்கான தேவைப்பாடு இல்லாதிருந்தமை போன்ற காரணங்களால் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் 3.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் iii இன் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று திறைசேரியால் ஒவ்வொரு செலவினத் தலைப்பிற்கு உரியதாக வெளியிடப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டும். எனினும், திணைக்களத்திற்குரியதாக திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் 3.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்க மைய உரிய இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் இணங்கவில்லை.<br><br>தலைப்பு இலக்கம் 230 இற்குரியதாக திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் கூற்று சரியானதல்ல. அதாவது 2018 திசெம்பர் மாதத்தில்மேற்கொள்ளப்பட்ட சில செலவினங்கள் பொறுப்புக்கள் கூற்றாக சான்றுப்படுத்தி அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து செலவினங்களும் 2018 திசெம்பர் நிறைவு செய்யப்பட்டவை ஆகும். உள்ளபடியாக இந்த திணைக்களத்திற்குரிய பொறுப்புக்கள் நிதிக்கூற்றின் குறிப்பு இலக்கம் (iii) மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த திணைக்களத்திற்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (iii) மாதிரிக்கமைவான பொறுப்புக்கள் |

| | |
|---|---|
| பொறுப்புக்களின் பெறுமதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 2.58 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பொதுத்திறைசேரிக்கு அனுப்பப்பட்ட போதிலும், தொழில்நுட்ப கோளாறு காரணமாக இவ்வாறு இடம்பெற்றுள்ளதாக அனுமானிக்கப்பட முடியும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தின் பிரதான பணிகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் நிறுவக கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி, முன்னுரிமைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், நடைமுறைப்படுத்த வேண்டிய காலச்சட்டகம், எதிர்பார்க்கப்பட்ட அடைவு மற்றும் கட்டுநிதி திட்டம் போன்ற விடயங்கள் உள்ளடங்கியிருக்கவில்லை. அதனால் அந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் உரிய முறையில் உள்ளடக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். 2014 ஆம் ஆண்டு முதல் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| ரூபா 185 மில்லியனான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டுனான சட்ட விஞ்ஞாபனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு மீளமைக்கும் செயற்திட்டம் 2014 யூலை 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 9.71 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | வழங்கப்படுகின்ற காலச்சட்டத்தினுள் செயற்திட்டத்தின் பணிகளை செயற்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் நிறைவேற்றி செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இனங்குகின்றேன்.<br><br>இந்த செயற்திட்டம் 2014.07.21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் செயற்திட்டத்தின் பணிகள் 2017 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்ய எதிர்பார்த்த போதிலும், சட்ட வரைவாக்கலின் விசேட திறன்களுள்ள உத்தியோகத்தர்களால் நுண்ணிய, தொழில்நுட்ப மதிப்பாய்வுக்கு உட்படுத்தி, அறிவினை பயன்படுத்தி, இந்த செயற்திட்டத்தின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. பெரும்பாலான உத்தியோகத்தர்கள் சாதாரண கடமையாற்றும் சட்ட உத்தியோகத்தர்களாகின்றமையும், இந்த செயற்திட்டத்தினை திட்டமிடும் போது எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட அதிக காலம் செலவிடப்படும் வேலையின் அளவினை நிறைவேற்ற நேர்கின்றமையும் எனும் காரணங்களின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் வேலைகள் 2017 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்ய முடியாதிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2018 சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் மேலும் 06 மாதங்களாக நீடிக்குமாறு அமைச்சரவை பிரமாணக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பிணை வைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880(1) இன் பிரகாரம் அரசின் பணம் முத்திரைக்கு பொறுப்பாக உள்ள மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை சான்றுப்படுத்தும் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடப்படும் உத்தியோகத்தர்கள் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்திற்கமைய பிணை வைக்க வேண்டிய போதிலும், ஏழு (07) உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880, 2011 சனவரி 08 ஆந் திகதிய அமைச்சரவை சுற்றறிக்கை இலக்கம் 01∴2011 மற்றும் 2014 மே 07 ஆந் திகதிய நீதிமன்றங்கள் அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 01/2011(I) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன்.<br><br>அரச உத்தியோகத்தர்களின் பிணை கிடைத்தல் தொடர்பில் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அது தொடர்பில் நீதிமன்றங்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 530,250 தொகையான 06 வாகன விபத்துக்கள் தொடர்பில பதிவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் காப்புறுதியின் மூலம் அறவீட்டின் பின்னர் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நட்டமானது ரூபா 100,133 ஆன போதிலும், நிதிக்கூற்றின் குறிப்பு இலக்கம் (i) இன் கீழ் இந்த நட்டம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 102 முதல் 110 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கவில்லை.<br><br>மீளாய்வாண்டினுள் 06 வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருந்த போதிலும், காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட தொகைக்கு உரிய பழுதுபார்த்தல்களை மேற்கொள்வதற்கு கராஜுடன் இணங்கியுள்ளமையால், கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திற்கு இந்த திணைக்களத்தினால் எவ்வித நட்டத்தினையும் ஏற்க நேரிடவில்லை. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40.1 இன் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய திணைக்களத்தின், உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத் தின் 40.1 இன் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | இந்த திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், இறுதியாக 2017 திசெம்பர் 05 ஆந் திகதி உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அந்த அறிக்கையில் அவை காணப்பட்டது 2018 ஆம் ஆண்டிலாகும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சிற்நத அரச நிர்வாகமொன்றினை உருவாக்குவதற்காக அரசின் பல்வேறு கொள்கைகள் சட்டமாக மாற்றுதல் சட்டவரைவாக்கல் பணியினை நிறைவேற்றுவதற்காக நேரடியாக பங்களிப்பினை வழங்கும் சிரேஷ்ட மட்டத்திலான மற்றும் மூன்றாம் நிலையிலான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 70 இல் 28 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. இந்த வெற்றிடங்கள் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடியதாகும். | செயலாற்றலுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். |